# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 25 செவ்வாய்க்கிழமை 24.12.2024 கதிர் 75







# பெண் மீது பாலியல் சீண்டல் மது போதையில் பொலீஸ் அடாவடி!

## - மாவிட்டபுரத்தில் பரபரப்பு-

(காங்கேசன்துறை, டிச. 24)

**குடும்பப் பெண் ஒருவரைத் தன்னுடன் தகாத உறவுக்கு வருமாறு அழைத்த பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவரால் மாவிட்டபுரம் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.**

**சம்பவத்தைச் சமரசம் பேசி, மூடி மறைப்பதற்குப் பொலீஸ் தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், சம்பவம் பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பாரபட்சமற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் அறிவுறுத்தியிருக்கிறார்.**

இந்தச் சம்பவம் இன்று காலை, காங்கேசன்துறை பொலீஸ் பிரிவுக்குட்பட்ட மாவிட்டபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: காங்கேசன்துறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவர் மாவிட்டபுரம் பகுதியில் உள்ள தையலகம் ஒன்றில் தைப்பதற்கு கொடுத்த சீருடையை எடுப்பதற்குச் சென்றுள்ளார்.

மது போதையில் காணப்பட்ட அவர், அங்கு பணிபுரியும் பெண்களுடன் தகாத வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபட்டதுடன், தன்னுடன் தகாத உறவுக்கு வருமாறு அவர்களை அழைத்துள்ளார். அதேநேரம், தையலகத்துக்கு வந்த யுவதிகளிடமும் தகாத முறையில் பேசி அவர்களையும் உறவுக்கு வருமாறு கொச்சைத் தமிழில் கேட்டுள்ளார்.

7➤

# தேசத்தைக் கட்டியெழுப்பும் பணி வீடுகளிலேயே ஆரம்பமாகிறது!

## - நத்தார் வாழ்த்துச் செய்தியில் பிரதமர் தெரிவிப்பு-



(கொழும்பு, டிச. 24)

ஆரோக்கியமான மக்கள் சமூகம் மற்றும் பலம்மிக்க தேசத்தை கட்டியெழுப்பும் பணியானது வீட்டிலிருந்தே ஆரம்பமாகின்றது என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

உலகெங்குமுள்ள கிருஸ்தவ மக்களால் கொண்டாடப்படும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியின் முழுமையான வடிவம் வருமாறு :

நத்தாரின் உண்மையான அர்த்தமான ஒற்றுமை, நன்றியுணர்வு மற்றும் சமாதானம் என்பவற்றிற்கு முன்னுரிமை வழங்கி நத்தாரை மகிழ்ச்சி மற்றும் அர்த்தமுள்ளதாக கொண்டாடுவோம். ஓர் தேசமாக மீள கட்டியெழுப்பும் இந்த மறுமலர்ச்சி யுகத்தில் தமது குடும்பம் மற்றும் அன்புக்குரியவர்களுடன் காலத்தை செலவிடுவது மிகவும் முக்கியமானது.

ஒற்றுமையுடன் செயற்படுதல், பகிர்ந்து வாழுதல் மற்றும் ஒருவருக்கொருவர் உதவி செய்வதன் ஊடாக எமது உறவுகளும் வலுவானதாக முன்னேற்றமடையும். ஆரோக்கியமான மக்கள் சமூகம் மற்றும் பலம்மிக்க தேசத்தை கட்டியெழுப்பும் பணியானது வீட்டிலிருந்தே ஆரம்பமாகின்றது என்பதை இதுபோன்ற கூட்டு

7➤

# விசேட பஸ் சேவை!

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு இன்று முதல் மேலதிக பஸ் சேவைகளை முன்னெடுக்க இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

வழமையான பஸ் சேவைகளுக்கு மேலதிகமாக இந்த பஸ் சேவைகள் இடம்பெறவுள்ளதாக

இலங்கை போக்குவரத்து சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்தார்.

அதனடிப்படையில், புறக்கோட்டை

7➤

# உணவகங்களில் சுகாதாரத்துறையினர் திடீர் பாய்ச்சல் : தரமற்றவை பறிமுதல்!

யாழ்ப்பாணம், டிச. 24

பண்டிகைக் காலத்தையொட்டி யாழ் மாவட்டத்தில் உள்ள உணவு கையாளும் நிலையங்களின் சுகாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன் இன்று திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இன்று காலை யாழ்ப்பாணம் நல்லூர், உடுவில் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இக் களப் பரிசோதனையில் சுகாதாரத் திணைக்களத்தை சேர்ந்த 9 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டன.

இதன்போது 76 உணவு கையாளும் நிலையங்கள் மேற்பார்வை செய்யப்பட்டன. அவற்றில் 28 உணவு கையாளும் நிலையங்களில் குறைபாடுகள் காணப்பட்டிருந்தன. 12 உணவு கையாளும் நிலையங்களுக்கு குறைபாடுகளை சீர்செய்யும்படி எழுத்துமூல அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

15 உணவு கையாளும் நிலையங்களில் தரமற்ற

7➤

# அரச எம்.பிகள் ஊடகங்களிடம் பேசுவதற்குத் தடை ஏதுமில்லை!

*(கொழும்பு, டிச.24)*

*ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடகங்களிடம் சுதந்திரமாகக் கருத்துச் சொல்வதற்குத் தடை எதுவும் விதிக்கப்படவில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சருமான கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.*

*அமைச்சரவைத்தீர்மானங்களை-அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது, செய்தியாளர் ஒருவர் "நீதி அமைச்சர் கட்சியின் அனுமதி இல்லாமல் தான் நேர்காணலில் கலந்து கொள்ள முடியாது என்று குறிப்பிடமை தொடர்பில்" கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ இவ்வாறு தெரிவித்தார்.*

*அவர் இதுபற்றி மேலும் விளக கமளிக்கையில், "அமைச்சரவையில் தீர்மானங்களை விளக்குவமற்காகவே உங்கள் வந்திருக்கிறேன். இதில் ஒரு ஒழுங்கு இருக்கிறது. அந்தந்தத் துறை சார்ந்த விடயங்களை அவற்றுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் தெரிவிப்பார்கள்.*

*எது எப்படியிருப்பினும், ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பியபடி கருத்துச் சொல்வதற்கு எந்தக் கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை. கருத்துச்சுதந்திரம் அனைவருக்கும் உண்டு" என்றார்.* *(ஐ-05)*

# இராணுவத்தின் ஏற்பாட்டில் மக்களுக்கு உதவிப் பொருள்கள்!





(யாழ்ப்பாணம், டிச. 24)

இராணுவத்தின் 51ஆவது படைப் பிரிவின் கீழ் இயங்கும் 513ஆவது பிரிகேட்டின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணிகள் மற்றும் வயோதிபர்களுக்கான உதவிகள் வழங்கும் நிகழ்வு

இன்று செவ்வாய்க்கிழமை 513ஆவது பிரிகேட் வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார்.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மானந்த யஹம்பத், கனடாவைச் சேர்ந்த வர்த்தகர் ரஜிகரன் சண்முகரத்தினம், தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பரா.நந்தகுமார், சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆகியோரும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும், கர்பிணிகள் மற்றும் வயோதிபர்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வர்த்தகரான ரஜிகரன் சண்முகரத்தினத்தின் நிதி உதவியில் வழங்கப்பட்டமைது.

(ஐ-05)

## இலஞ்சம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் கைது!

(திருகோணமலை, டிச. 24)

பொலீஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைபபாட்டை விசாரித்து, எதிராளியிடமிருந்து தருமதியாக இருந்த பணத்தை வாங்கிக் கொடுப்பதற்கு இலஞ்சம்கோரிய பொலீஸ் அதிகாரிஒருவரை இலஞ்சஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் கைது செய்துற்னனர்.

இந்தச் சம்பவம் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்றது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, பணத் தகராறு தொடர்பில் தம்பலகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார்.

இது தொடர்பான முறைப் பாட்டை விசாரித்து, முறைப் பாட்டாளருக்கு தர வேண்டிய பணத்தை பெற்றுத்தர தேவயான ஏற்பாடுகளை செய்து தர முடியும்என கூறி, அதற்காக ஐயாயிரம்ரூபாவை இலஞ்சமாக சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில், திருகோணமலை பொலிஸ் நிலையத்தின் பல்வேறு முறைப்பாடுகள் விசாரணைப் பிரிவில் சமூக பொலிஸ் பிரிவில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜென்ட் ஒருவர் நேற்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் திருகோணமலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## கல்முனையில் மீட்கப்பட்ட ஆணின் சடலம்

கொழும்பு, டிசெ 24

கல்முனையில் (விடுதி அறை ஒன்றின் மலசல கூடத்தில் மீட்கப்பட்ட ஆணின் சடலம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள விடுதி அறை மலசல கூடத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் குறித்த சடலம் நேற்று மீட்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சடலமாக மீட்கப்பட்டவர் அப்பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் பணியாற்றி வந்த பெரிய நீலாவணை 02 செல்லத்துரை வீதி பகுதியை சேர்ந்த 2 பெண் பிள்ளைகளின் தந்தையான 54 வயது மதிக்கத்தக்க பூசாரி சந்திரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கல்முனை ஆதாரவைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டு, சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் ஜவாஹீர் மேற்கொண்டார்.

இதன்போது தற்கொலை செய்தமைக்கான அடையாளம் தென்பட்டுள்ளதாகவும் கழுத்து எழும்பு முறிவடைந்து மரணம் சம்பவித்துள்ளதாக மரண விசாரணை அறிக்கையிடப்பட்டு உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த மரணம் குடும்ப பிரச்சினை காரணமாக இடம்பெற்றதா அல்லது வேறு ஏதாவது விடயத்திற்காக மரணம் சம்பவித்துள்ளதா என மேலதிக விசாரணைகளை கல்முனை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதில் அநுர அரசு உறுதி – பிரதி அமைச்சர் நாமல்

கொழும்பு, டிசெ 24

“நாட்டில் தற்போதுள்ள அரசமைப்புக்குப் பதிலாக புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என்ற உறுதிமொழி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மக்கள் ஆணையும் கிடைக்கப்பெற்றுள்ளது.

எனவே, அந்த உறுதிமொழி நிச்சயம் நிறைவேற்றப்படும்” என்று பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசமைப்பு தொடர்பில் மக்களின் கருத்துக்கள் உள்வாங்கப்படும். நாட்டில் இதுவரை இயற்றப்பட்ட அரசமைப்புகளின்போது மக்களின் கருத்துகள் உள்வாங்கப்படவில்லை. எம்மால் கொண்டுவரப்படும் அரசமைப்பு மக்கள் அனுமதி கிடைத்ததாக இருக்க வேண்டும். அதற்குரிய பணிகளுக்காகவே மூன்று வருடங்கள் என கால எல்லை குறிப்பிடப்பட்டிருக்கலாம்.

கடந்த கால யோசனைகளும் உள்வாங்கப்பட்டு எவ்வளவு சீக்கரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இதனைச் செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

சிலவேளை மூன்று வருடங்களுக்கு முன்னர்கூட அது நடக்கலாம் என்று தெரிவித்தார். (ஐ)

## மதுபான சாலைகளுக்கு எதிராக கண்டன பேரணி!

(கிளிநொச்சி, டிச. 24)

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவான மதுபான சாலைகள் திறக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று கண்டன பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பேரணி கிளிநொச்சி பசுமைப் பூங்கா முன்றலில் இருந்து ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பேரணியைத் தொடர்ந்து மத தலைவர்கள் இணைந்து ஜனாதிபதிக்கான கோரிக்கைகள் அடங்கிய மகஜரை மாவட்ட அரச அதிபர் சு.முரளிதரனிடம் கையளித்துள்ளனர்.

இப்போராட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் சிவில் சமூக அமைப்புகள், மதத் தலைவர்கள், வர்த்தக சங்கத்தினர், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பெண்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-05)

## அரச ஊழியர்களுக்கான மேலதிக கொடுப்பனவில் வெளியாகியுள்ள தகவல்

கொழும்பு, டிசெ 24

அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களுக்கு 2024 ஆம் ஆண்டிற்கான மேலதிக கொடுப்பனவு வழங்குவது தொடர்பான சுற்றறிக்கையை நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ளது. இந்த சுற்றறிக்கையானது, திறைசேரி செயலாளர் மகிந்த சிறிவர்தனவினால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த ஆண்டுக்கான மேலதிக கொடுப்பனவை எவ்வாறு வழங்குவது என்பது குறித்து அந்த சுற்றறிக்கையில் முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன.

2023ஆம் ஆண்டில் இலாபம் ஈட்டியுள்ள மற்றும் குறைந்தபட்சம் 30 சதவீத இலாபத்தை ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கு ஈவுத்தொகையாக அல்லது வரியாக செலுத்திய நிறுவனங்களின் ஊழியர்களுக்கு 25,000 அல்லது 20,000 ரூபாய் மேலதிக கொடுப்பனவாக முன்மொழியப்பட்டுள்ளது.

குறித்த சுற்றறிக்கை மூலம் உரிய மேலதிக கொடுப்பனவு வழங்குவதில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, திறைசேரி குறிப்பாக மேலதிக கொடுப்பனவு வழங்குவதற்கு நிதி வழங்காது என திறைசேரி செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்குவதில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால், அதற்கு அமைச்சரவையின் சிறப்பு அங்கீகாரத்தை பெறுவது கட்டாயம் என்றும் அறிவுறுத்தபட்டுள்ளது. (ஐ)

# விவசாயிகளுக்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம்



கொழும்பு, டிசெ 24

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும் தீர்மானத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி, ஒரு ஹெக்டருக்கு ஒரு இலட்சம் ரூபாவை நிவாரணமாக வழங்குவதற்கு தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அறிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் இன்றைய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், நெல், சோளம், உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம் மற்றும் சோயாபீன்ஸ் ஆகிய ஆறு வகையான பயிர்களை பயிரிட்ட விவசாயிகளுகக்கு இந்த இழப்பீடு வழங்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கடந்த டிசம்பர் 02ஆம் திகதி வரையான மோசமான காலநிலையினால் ஏற்பட்ட பயிர் சேதங்கள் தொடர்பில் விவசாயத்துறை அமைச்சரினால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## வாகன இறக்குமதிக்கான புதிய வரி நிதியமைச்சின் முக்கிய அறிக்கை



கொழும்பு, டிசெ 24

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான வரிக்கொள்கை தொடர்பில் நிதியமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும், வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் இதுவரை இறக்குமதி செய்யப்படும் திகதி மற்றும் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்ட வாகனங்களின் வகைகள் மாத்திரமே அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். (ஐ)

## கொழும்பில் கொடூரமாக மகனை தாக்கிய தந்தையின் வெறிச்செயல்




கொழும்பு, டிசெ 24

கொழும்பில் கூரிய ஆயுதத்தால் மகனை குத்தி காயப்படுத்திய தந்தை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

போதைக்கு அடிமையான தந்தையால் மகன் தாக்கப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க உத்தரவிட்டார்.

மாளிகாவத்தை பகுதியை சேர்ந்த அப்துல் அஸீஸ் மொஹமட் என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.


முன்னதாக போதைப்பொருள் பாவனை காரணமாக புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பப்பட்ட சந்தேகநபர், உரிய புனர்வாழ்வு நடவடிக்கையின் பின்னர் வீடு திரும்பிய நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

சந்தேகநபரின் மகன் மாளிகாவத்தை, ஜ/ம்மா வீதி பகுதியில் மரக்கறி விற்பனை செய்யும் வியாபாரி என தெரியவந்துள்ளது.

சந்தேக நபரான தந்தை கடந்த 21ஆம் திகதி அதிகாலை 5.30 மணியளவில் மரக்கறி வியாபார நிலையத்திற்குச் சென்ற போது, மகனை கத்தி போன்ற கூர்மையான ஆயுதத்தில் குத்தியுள்ளார்.

படுகாயமடைந்த மகன் மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருப்பதால் அவரிடம் வாக்குமூலம் பெற முடியாது என பொலிஸார், நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். (ஐ)

## தொடரும் மணல் அகழ்வு: இளங்குமரன் எம்.பி களவிஜயம்



தென்மராட்சி, டிசெ 24

யாழ்.-தென்மராட்சி-கரம்பகம்பிரதேசத்திலுள்ள வீதி மற்றும் விவசாய நிலங்களில் மண் அகழ்வு இடம்பெற்றுவரும் இடங்களை நாடாளுமன்ற உறுப்பினர் கணநாதன் இளங்குமரன் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கரம்பகத்திலுள்ள விடத்தற்பளை - கரம்பகப் பிள்ளையார் இணைப்பு வீதி மற்றும் விளை நிலங்களில் அண்மைக் காலமாக சட்டவிரோத மண் அகழ்வு இடம் பெற்றுவருவதாக பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனைக் கண்டித்து பிரதேச மக்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த விவசாய வீதி நெடுங்காலமாக மணல் வீதியாகவே இருந்து வந்துள்ளதோடு, பிரதேச விவசாயிகள் தங்களது விவசாய உற்பத்தி பொருட்களை எடுத்துச் செல்வதற்கு சிறந்த வீதியாக இதனைப் பயன்படுத்தியும் வந்துள்ளனர்.

இந் நிலையில், மண் அகழும் இயந்திரத்தின் உதவி கொண்டு 25க்கும் மேற்பட்ட டிப்பர் மண் வீதியிலும், வீதி ஓரங்களிலும் அகழப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இவ் வாறிருக்கையில், குறித்த பிரதேசத்தில் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்றுவதாகவும், அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்நிலையில், தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கணநாதன் இளங்குமரன், சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், கரம்பகம் கிராம அலுவலர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து மண் அகழ்வு இடம் பெற்றுள்ள இடங்களை பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## துறைமுகங்களில் கொள்கலன் அனுமதியை சீரமைப்பதற்கான குழுவிற்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, டிசெ 24

இலங்கை துறைமுக அதிகார சபையின் கொள்கலன்களை விடுவிக்கும் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கு குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் தனியார் துறையால் நடத்தப்படும் 02 கொள்கலன் முனையங்களும், 02 கொள்கலன் முனையங்களாக அரசாங்கத்தால் இயக்கப்படும் 04 கொள்கலன் முனையங்களும் உள்ளன.

அங்கு, ஒரு நாளைக்கு 5,000 - 10,000 கொள்கலன்கள் சோதனை செய்யப்பட்டு, ஏற்றுமதி அனுமதி உட்பட ஒரு முனையம் மூலம் விடுவிக்கப்படுகின்றன.

சுங்க அதிகாரிகள் வெளியேறும் வாயில்களில் கொள்கலன்களை பரிசோதிக்க வேண்டும் மற்றும் கொள்கலன்களை உடல் ரீதியாக பரிசோதனை செய்ய வேண்டும்.

கடந்த காலங்களில், அனுமதி நடவடிக்கையின் போது ஏற்படும் பல்வேறு சிக்கல்களால், சுங்க அதிகாரிகள் தினமும் ஏராளமான கொள்கலன்களை ஆய்வு செய்ய வேண்டியிருந்ததுடன், துறைமுகத்திற்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்பட்டது.

இதன்படி, கொள்கலன் வெளியீட்டுச் செயல்முறையை மேலும் திறம்படச் செய்வதற்கும் பொருத்தமான அமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளார்.

அத்துடன, துறைமுகத்தில் இருந்து கொள்கலன்களை தாமதமின்றி விடுவிக்கவும் இதன்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# தலித் என்பதால் கொலை செய்யப்பட்டார்.. மகாராஷ்ட்ராவில் ராகுல் காந்தி காட்டம்





மகாராஷ்டிர மாநிலம் பர்பானி நகரில் கடந்த டிசம்பர் 10 ஆம் திகதி ரயில்வே நிலையத்துக்கு அருகே உள்ள அம்பேத்கர் சிலை முன்பாக அடையாளம் தெரியாத நபர் ஒருவர் அரசியலமைப்பு பிரதியை எரித்ததை தொடர்ந்து அங்கு வன்முறை வெடித்தது.

பகுஜன் அகாடி (ஏடீயு) கட்சியினர் உட்பட பலர் போராட்டங்களில் ஈடுபட்டு வந்த நிலையில் டிசம்பர் 11 ஆம் திகதி இரவு கலவரத்தில் ஈடுபட்டு சொத்துகளை சேதப்படுத்தியதாக 50 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

அவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் 35 வய-தான பகுஜன் அகாடி தலித் செயற்பாட்டாளர் சோ-ம்நாத் வெங்கட் சூர்யவன்ஷி என்பவர் டிசம்பர் 15 காலையில் அவர் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து உயிரிழந்தார்.

நெஞ்சுவலி காரணமாக சூர்யவன்ஷி உயிரிழந்ததாக பொலிஸ் தெரிவித்தது. ஆனால் போராட்டத்தின்பின் பின் காணொளி பதிவுடன் நடத்தப்பட்ட பிரேத பரிசோ-தனையில் சூர்யவன்ஷியின் உடலில் பல இடங்களில் காயங்கள் இருந்ததும், அந்த காயங்களால் ஏற்பட்ட அதிர்ச்சியில் அவர் உயிர் பிரிந்துள்ளது என்றும் மரு-த்துவர்கள் உறுதிப்படுத்தினர். எனவே சித்திரவதை செய்யப்பட்டு அவர் உயிரிழந்தது உறுதியானது.

நாடோடி இனமான வடார் இனத்தைச் சேர்ந்த சூர்யவன்ஷி, பகுஜன் அகாடி கட்சியுடன் இணைந்து உள்ளூார் செயற்பாட்டாளராக சூர்யவன்ஷி இருந்-துள்ளார்.

சூரியவனாக்ஷியின் குடும்பத்தினர் முதலில் மாவ-ட்டத்துக்குள் நுழைய விடாமல் பொலிஸால் தடுக்க-ப்பட்டதுடன் அவரது உடலை பர்பானிக்கு கொண்டு வர அனுமதிக்கவில்லை. ஆனால் பகுஜன் அகாடி தலைவர் பிரகாஷ் அம்பேத்கர், மற்றும் போராட்டக்க-ாரர்களின் எதிர்பால் காவல்த்துறை பின்வாங்கியது.

பர்பானிக்கு மாவட்டத்தில் தலித்-பகுஜன் அம்பே-த்கரிய இளைஞர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையின் அளவை சூர்யவன்ஷியின் மரணம் எடுத்துக்காட்டுவதாகவும் இந்த விவகாரத்தில் முதல்-வர் தேவேந்திர பட்னாவிஸ் முற்றிலும் தோற்றுப் போயுள்ளார் என்று எதிர்க்கட்சிகள் குற்றம்சாட் டியுள்ளன.

இன்னும் பர்பானியில் கொந்தளிப்பான சூழல் நிலவி வரும் நிலையில் காங்கிரஸ் தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி, பொலிஸ் சித்திரவதையில் உயிரிழந்த சோ-ம்நாத் வெங்கட் சூர்யவன்ஷியின் குடும்பத்தினரை நேற்று ஜதிங்கள்கிழமைஸ நேரில் சென்று சந்தித்-துள்ளார்.

மேலும் கலவரத்தால் பாதிக்கப்பட்டோரைச் சந்தித்து பேசிய ராகுல் காந்தி, தலித் என்ற காரணத்திற்காகவும், அரசியல் சாசனத்தைக் காத்ததற்காகவும் இளைஞன் கொல்லப்பட்டான்.இது ஒரு 100 சதவீத லாக் அப் மரணம். காவல்துறை அவரை கொன்றுவிட்டது.

காவல்துறையை பாதுகாக்க சட்டசபையில் முதல்வர் பொய் சொல்லிக்கொண்டிருக்கிறார். அரசியல் சாசன-த்தை துடைத்தெறிவதே ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தின் நோக்கம் துடைத்து என்று ராகுல் தெரிவித்தார்.

இதற்கிடையே புனேயில் செய்தியாளர்களிடம் பேசிய மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ், ராகுல் காந்தி அரசியல் காரணங்களுக்காக மட்டுமே இங்கு வந்தார். மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்துவதே அவரது வேலை. கலவரம் தொடர்பான அனைத்து வழக்குகளையும் விசாரித்து வருகிறோம். வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது என்று தெரிவித்தார்.

## ஆழ்துளை கிணற்றில் விழுந்த 3 வயது குழந்தை– மீட்பு பணி தீவிரம்!



*ராஜஸ்தான் மாநிலம் கோட்பூட்லி நகர் அருகே சரூந்த் கிராமம் உள்ளது. அங்குள்ள விவசாய நிலத்திற்கு அருகே சுமார் 700 அடி ஆழத்தில் ஆழ்துளை கிணறு ஒன்று பாசனத் திற்காக தோண்டப்பட்டது. தொடர்ந்து நீர் ஊராத நிலையிலும் மூடப்படாமல் திறந்து கிடந்துள்ளது.*

*இந்தநிலையில் அங்கு விளையாடி கொண்டிருந்த 3 வயது பெண் குழந்தை ஒன்று எதிர்பாராவிதமாக ஆழ்துளை கிணற்றில் விழுந்தது.*

*தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் ஆழ்துளை கிணற்றில் விழுந்த குழந்தையை மீட்க போராடி வருகின்றார்கள்.*

## குஜராத் பல்கலைக்கழக வாசலில் அம்பேத்கர் சிலை சேதம்: போராட்டத்தில் மக்கள்!




குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரின் கோக்ரா பகுதியில் ஸ்ரீ கே.கே. சாஸ்திரி பல்கலைக்கழகம் முன்னால் அமைந்துள்ள டாக்-டர் பாபாசாகேப் அம்பேத்கரின் சிலை நேற்று ஜதிங்கள்கிழமை அதிகாலை சேதப்படுத்தப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் .

அடையாளம் தெரியாத சில சமூக விரோதிகள் அம்பேத்கரின் சிலை மூக்கு மற்றும் கண்ணாடியை சே-தப்படுத்தி உள்ளதாக பொலிஸ் இன்ஸ்பெ-க்டர் என்.கே.ரபாரி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். மேலும் சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் குற்றவாளிகளைத் தேடி வருவதாக அவர் தெரிவித்தார்.

குற்றவாளிகள் மீது விரைந்து நடவ-டிக்கை எடுக்கக் கோரி சிலை அருகே போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் சமூக நீதியின் சின்னம் மீது நடத்தப்பட்ட தா-க்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

மகாராஷ்டிராவின் பர்பானி நகரில், அம்பேத்கரின் சிலை-லக்கு முன் அரசியலமைப்பின் முன்னுரையை எரித்த மர்ம நபரால் அங்கு கலவரம் நடந்து வரும் நிலையில் குஜராத்திலும் அம்பேத்கர் சிலை சேதப்படுத்தப்பட்டுள்ளது மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த பெண் அல்லு அர்ஜுன் காவல்நிலையத்தில் ஆஜர்

‘புஷ்பா 2’ சிறப்பு காட்சியைப் பார்க்க நடிகர் அல்லு அர்ஜுன் சென்றபோது ஏற்பட்ட கூட்டநெரிசலில் சிக்கி 35 வயதுடைய பெண் உயிரிழந்தார். அவரது மகனுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பான வழக்கில் நடிகர் அல்லு அர்ஜுன் கைது செய்யப்பட்டு பிணையில் வெளியே விடப்பட்டார். அவரது கைது நடவடிக்கை தெலுங்கானா மாநில சட்டசபை வரை எதிரொலித்தது. அல்லு அர்ஜுன் மீதான நடவடிக்கை சரியானது என முதல் மந்திரி ரேவந்த் ரெட்டி விளக்கம் அளித்ததுடன், அல்லு அர்ஜுன் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். முதல் மந்திரியின் குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு தெரிவித்த அல்லு அர்ஜுன், என்னைப் பற்றி பொய்யான செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. நான் எந்தத் துறையையும், அரசியல்வாதியையும் குறைசொல்ல விரும்பவில்லை என தெரிவித்தார்.

இதையடுத்து, காங்கிரஸ் கட்சியினரும், அல்லு அர்ஜுன் தரப்பினரும் மாறி மாறி குற்றம்சாட்டி வருகின்றனர்.

இதற்கிடையே, ஐதராபாத்தில் உள்ள நடிகர் அல்லு அர்ஜுன் வீடு மீது கற்களை வீசி உஸ்மானியா பல்கலைக்கழக மாணவ அமைப்பினர் தாக்குதல் நடத்தினர்.

இந்நிலையில், திரையரங்க சம்பவத்தை தொடர்ந்து காவல் நிலையத்தில் ஆஜராக நடிகர் அல்லு அர்ஜுனுக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி, இன்று காலை 11 மணிக்கு ஆஜராகுமாறு சிக்கடாபள்ளி பொலிஸார் சம்மன் அனுப்பி இருந்தனர்.

இதனை தொடர்ந்து ஐதராபாத் சிக் கடாபள்ளி காவல் நிலையத்தில் நடிகர் அல்லு அர்ஜுன் இரண்டாவது முறையாக இன்று ஆஜராகி உள்ளார். அவருடன் அவரது வழக்கறிஞர் காவல் நிலையத்திற்கு வருகை தந்துள்ளார்.



# பிள்ளைக் கனியமுதே!

இந்த உலகின் ஆகப்பெரிய சொத்து, பணமோ பொருளோ இல்லை. வீடு வாசலோ, கார் பங்களாவோ கிடையாது. ஒரு குழந்தை தரும் குதூகலத்துக்கு இணை இங்கே ஏதுமில்லை. குழந்தைகள் தான் நம் சொத்து. குழந்தைகள் விஷயத்தில்… ஓர் வார்த்தை உண்டு, வாழையடி வாழை. ஏனெனில், குழந்தைகள் வம்சம் சம்பந்தப்பட்டவர்கள். அதனால் வாழையடி வாழையெனச் சொல்லிவைத்தார்கள்.

‘நான் உன்னை விட புத்திசாலி’ என்று எவரேனும் நம்மிடம் சொன்னால், சுருக்கென வலிக்கும். கோபம் கூட வரும். ஆனால், எல்லோரிடமும் ‘என் குழந்தை என்னை விட புத்திசாலி’ என்று மார்தட்டிச் சொல்லிப் பூரிப்போம். அப்படி அவர்களைப் புத்திசாலிகள் என்று அக்கம்பக்கத்தாரும் உறவுக்காரர்களும் சொல்லவேண்டுமே என பரபரத்துக் கிடக்கிறோம் என்பதுதான் இங்கே பிரச்சினை.

வேலைக்குச் சேர்ந்ததும் பணம் குறித்த, சேமிப்பு தொடர்பான மிகப்பெரிய திட்டமிடலைக் கையாள்கிறோம். போலிஸிகளையும் மியூச்சுவல் ஃபண்டுகளையும் கணக்கெடுத்து, ஆராய்ந்து, எதில் போட்டால் நல்ல லாபம் என்று கூட்டி, கழித்து, பெருக்கி, வகுத்து, பகுத்து பணம் சேமிக்க இறங்குகிறோம். இன்றைக்கு, குழந்தை வளர்ப்பில், கிட்டத்தட்ட இதுதான் நடக்கிறது.

திருமணமானதுமே, தம் குழந்தைகளின் பாடசாலையை முடிவு செய்துகொள்கிறார்கள். அந்தப் பாடசாலைக்கு அருகில் வீடு வாங்கத் திட்டமிடுகிறார்கள். அப்படி இல்லையென்றாலும் எட்டுப்பத்து கிலோ மீற்றரில் உள்ள பாடசாலைக்கு , வேன், பஸ் மூலம் குழந்தைகளை அனுப்புகிறார்கள். ‘எந்த பாடசாலையில் நிறைய பணம் வாங்குறாங்களோ… அதான் நல்ல பாடசாலை ’ எனும் மனோநிலை நம்மிடம் இருக்கிறது.

இன்றைய பள்ளிக்கூடங்களும் சரி, சூழலும் சரி… நீதிபோதனை வகுப்புகளை நடத்துவதே இல்லை. நீதியையும் வாய்மையையும் சொல்ல, தாத்தா, பாட்டிகளும் அருகில் இல்லை. நாமும் கூட வீட்டு ஹோலில், எல்லோரும் சேர்ந்து அமர்ந்திருந்தாலும் ஒரு குழந்தை ரிமோட்டை வைத்திருக்க, இன்னொரு குழந்தை செல்போனை நோண்டிக் கொண்டிருக்க, மனைவி கேண்டி க்ரஷ் விளையாட, கணவன் முகநூலில் முகம் புதைத்திருக்க… அப்பா அம்மாக்களின் அரவணைப்பு இல்லாமலும் தாத்தா பாட்டியின் அன்பு கூட இல்லாமலும்சோட்டாபீம்களுடனும் டோராக்களுடனும் பேசிக்கொண்டிருக்கின்றன குழந்தைகள்.

அடுத்து ‘நான் பட்ட கஷ்டம் என் குழந்தைகள் படக்கூடாது’ என்கிறோம். நல்ல விஷயம்தான். ஆனால் அதற்காக, கேட்டதையெல்லாம் பீட்ஸா டெலிவரி நேரத்தை விட, வேகமாக வாங்கிக் கொடுத்து விடுகிறோம்.

இங்கே வாழ்க்கையானது எதையும் தங்கத்தாம்பாளத்தில் வைத்து உடனே வழங்கி விடாது. விருப்பப்பட்டது எதுவும் உடனே கிடைத்துவிடாது. அப்படிக் கிடைத்தால் சந்தோஷம். விடாதே என்பதை யாரும், நம் குழந்தைகளுக்குச் சொல்லித் தருவதே இல்லை. சொல்லித் தருவதென்றால் பிரம்பை வைத்து , நாக்கைத் துருத்தி, ஆவேசக் குரலில் அவர்களை அலறவிடுவதா? அது இல்லை. உணர்த்த வேண்டும். அப்படி அவர்களை உணர்த்துவதில்தான் இருக்கிறது நம்முடைய தெளிவும் வாழ்வும்.

இன்னும் முக்கால்வாசிபேர் செய்யும் செயல், “நான் பரதம் கற்றுக்கொள்ள ஆசைப்பட்டேடன். முடியவில்லை . ஆனால் என் மக்களை சேர்த்துவிட்டேன். ‘நான் கராத்தே கற்றுக் கொள்ள ஆசைப்பட்டேன். அது தான் என் மகனை சேர்த்துவிட்டேன்’… என்பவர்களைப் பார்த் திருப்போம். நாமே கூட இப்படி ஏதேனும் சேர்த்துவிட்டிருப்போம்.

நம்முடைய சிந்தனைகளையும்ஆசைகளையும் தோல்விகளையும் அவர்கள் முதுகிலும் மனதிலும் சுமப்பது மிகப்பெரிய வன்முறை இல்லையா. நம் ஆளுமைகளைத் திணிக்க, அவர்கள் எப்படி ஆளுமைமிக்கவர்களாக வளர்வார்கள் ஒளிர்வார்கள் மிளிர்வார்கள்?



குழந்தைகளை குழந்தைகளாகவே இருக்க விடுவதில்லை நாம். இதில் ஒரு வேதனையான வேடிக்கை என்ன தெரியுமா? குழந்தைகளாக இருந்து, வளர்ந்து, வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் குழந்தைகளையும் அவர்களுக்கான உலகத்தையும் உணர்ந்து, புரிந்து, தெளிதல் என்பதே இல்லை. இது கசக்கிற நிஜம். வலிக்கிற உண்மை.

செல்போனில் யாரோ நம்மை அழைக்க… ‘நான் உறங்குகிறேன் என்று சொல்லு’, ‘நான் போனை மறந்துவைச்சிட்டுப் போய் விட்டேன் என்று சொல்லு’ என்பதையெல்லாம் எந்தப் பெற்றோர் செய்கிறார்களோ, இதையெல்லாம் குழந்தைகள் வெறித்துப் பார்க்கும்படி எவரெல்லாம் நடந்துகொள்கிறார்களோ, அவர்களின் வளர்ப்பில் வரும் குழந்தைகளிடம் ‘வாய்மையே வெல்லும்’ சொல்லி எந்தப் பிரயோசனமும் இல்லை.

உண்மை, நேர்மை, சத்தியம், நன்றி மறவாமை, விட்டுக் கொடுத்தல் என்கிற சின்னச் சின்ன விஷயங்கள் மூலமாகத்தான் இனிமையாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. மனைவியை மதிக்காத கணவன், அதாவது அம்மாவை அப்பாவே மதிக்கவில்லை எனும் போது, பிள்ளை எப்படி அம்மாவை மட்டுமின்றி அப்பாவையும் மதிப்பான். பெற்றோரை மதிக்காத சூழலில், பிறரையும் சக மனிதர்களையும் இந்த உலகையும் எப்படி மதிக்கும்? எவ்விதம் நேசிப்பு இருக்கும்?

குழந்தைகள்தான் நம் உலகம். குழந்தைகள் கையில்தான் நாளைய உலகம். நாளைய உலகுக்கு ஆரோக்கியமான குழந்தையை விட்டுச் செல்வது தானே நம் பொறுப்பு கடமை. குழந்தைகளைக் குழந்தைகளாகவே வளரவிட்டால்… குழந்தைகள் பின்னாளில் மாமனிதர்களாவர்கள்! மனிதருள் மாணிக்கமாவார்கள்!

வைத்தியர் , பொறியியலாளர், சட்டதரணி , விஞ்ஞானி, கலைஞன் என நம் குழந்தைகள் வளரட்டும். தப்பே இல்லை. அவர்கள் மனிதர்களாக வளர்வதும் வாழ்வதும் மிக மிக முக்கியம். உணர்வதும் தெளிவதும் நாமே! குழந்தைகளைக் கொண்டாடுவோம்! வன்முறையில்லாத, எதிர்பார்பபில்லாத நேசத்தை ஊட்டி வளர்ப்போம்!

குழந்தைகளின் உலகத்தை, குழந்தைகளுக்குத் தருவோம். அதுதான் அவர்களுக்குத் தரும் உண்மையான பரிசு.



**“குழந்தைகளை குழந்தைகளாகவே இருக்க விடுவதில்லை நாம். இதில் ஒரு வேதனையான வேடிக்கை என்ன தெரியுமா? குழந்தைகளாக இருந்து, வளர்ந்து, வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் குழந்தைகளையும் அவர்களுக்கான உலகத்தையும் உணர்ந்து, புரிந்து, தெளிதல் என்பதே இல்லை. இது கசக்கிற நிஜம். வலிக்கிற உண்மை.”**

# ஜேர்மனியில் பயங்கரவாத தாக்குதல்

## காயமடைந்த இந்தியர்களில் 3 பேர் வீடு திரும்பினர்!



ஜேர்மனியில் மக்திபர்க் நகரின் மையப்பகுதியில் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு சந்தை அமைக்கப்பட்டிருந்தது. இந்த சந்தையில் கடந்த 20-ந் திகதி இரவு குவிந்த மக்கள், பண்டிகைக்கு தேவையான கேக், பரிசுபொருட்கள் உள்ளிட்டவற்றை வாங்கி கொண்டிருந்தனர்.

இதன்போது , கார் ஒன்று வேகமாக வந்து கூட்டத்திற்குள் நுழைந்தது. இதனால் மக்கள் அலறியடித்தபடி ஓடினர். இந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

200-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்நிலையில், பலி எண் ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளதோடு 15 பேர் படுகாயமடைந்து உள்ளனர். 37 பேருக்கு மித அளவிலான காயமும், 16 பேருக்கு லேசான காயமும் ஏற்பட்டு உள்ளது. உயிரிழந்தவர்களில் குழந்தை ஒன்றும் அடங்கும்.

விபத்து ஏற்படுத்திய நபர் சவுதி அரேபியாவை சேர்ந்த 50 வயதான மருத்துவர் என தெரிய வந்தது.

அவரை பொலிஸார் கைது செய்து நடத்திய முதற்கட்ட விசாரணையில் இது பயங்கரவாத தாக்குதல் என தகவல் வெளியாகியுள்ளது.

அந்த நபர் அகதியாக வந்தவர் என கடந்த 2016-ம் ஆண்டு ஜூலையில் அறியப்பட்டவர். ஜேர்மனியில் வசிப்பதற்கான அனுமதியை பெற்றிருக்கிறார்.

இந்த சம்பவத்தில், இந்தியர்கள் 7 பேர் காயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் 3 இந்தியர்கள் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளனர். மற்ற 4 பேரும் தொடர்ந்து சிகிச்சையில் உள்ளனர்.

இதனை பெர்லின் நகரில் உள்ள இந்திய தூதரகம், அதனுடைய எக்ஸ் சமூக ஊடகத்தில் பதிவிட்டு உள்ளது.

அவர்களுடன் தூதரகம் தொடர்ந்து தொடர்பில் இருப்பதுடன், தேவையான ஆதரவையும் வழங்கி வரு கிறது. அவர்களுடைய குடும்பத்தினருடனும் தொடர்ந்து தொடர்பில் உள்ளது என்று தெரிவித்து உள்ளது.

# டிக்–டாக் செயலிக்கு அல்பேனியாவில் தடை!




ஐரோப்பாவின் தென்கிழக்கே அமைந்துள்ள பால்கன் வளைகுடா நாடு அல்பேனியா. இங்கு பிரபல சமூகவலைதளமான டிக்-டாக் செயலி மூலம் இருதரப்பினர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து ஏற்பட்ட தகராறில் சக மாணவனை சிறுவன் கத்தியால் குத்திக் கொன்ற சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதனையடுத்து மாணவர்களிடையே வன்முறையை தூண்டுவதாக கூறி டிக்-டாக் செயலிக்கு அல்பேனியா அரசாங்கம் தடை விதித்துள்ளது. இது அடுத்த ஓராண்டுக்கு தொடரும் என பிரதமர் எடி ராமா தெரிவித்துள்ளார். ஆனால் டிக்-டாக் செயலியின் பைட் டான்ஸ் நிறுவனம் அரசின் இந்த முடிவை அவசர முடிவு என குற்றம்சாட்டியது.

இதற்கு பதிலளித்த பிரதமர் எடி ராமா, அரசின் இந்த முடிவு ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருடன் பலமுறை சந்திப்புக்கு பின்னரே எடுக்கப்பட்டு இருப்பதாக கூறினார்.

# பிரான்சில் பிரதமரின் கீழ் புதிய அரசாங்கத்தை அமைத்த மேக்ரான்





பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மேக்ரான் பிரதமர் பிராங்கோயில் பெய்ரூ தலைமையின் கீழ் புதிய அரசாங்கத்தை அமைத்தார்.

இரண்டு வாரங்களுக்கு முன் நம்பிக்கையில்லா தீர்மானத்தில் பார்னியேர் தோல்வியடைந்ததால் பிரான்ஸ் அரசு கவிழ்ந்தது.

அதனைத் தொடர்ந்து, அடுத்த அரசை அமைப்பது குறித்து கூட்டம் நடத்தப்பட்டது. இந்த நிலையில் முந்தைய அமைச்சரவையின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஜனாதிபதி இமானுவல் மேக்ரான் (நுஅஅயரெநட ஆயஉசழஹ) புதிய அரசாங்கத்தை அறிவித்தார்.

நியூயார்க் டைம்ஸ் அறிக்கையின்படி, புதிய பிரான்ஸ் அரசாங்கத்தின் மைய-வலது நோக்குநிலையானது, பாராளுமன்றத்தில் இடது மற்றும் தீவிர வலதுசாரிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி, மூன்று மாதங்களுக்கும் குறைவான காலத்திற்குள் நீடித்த முந்தைய அரசாங்கத்தின் போக்கை பிரதிபலித்தது.

வரவு செலவு திட்ட முன்மொழிவுகள் தொடர்பான அரசியல் நெருக்கடியில் இருந்து, இரண்டாவது பெரிய ஐரோப்பிய ஒன்றியப் பொருளாதாரத்தை இழுக்க மேக்ரான் ஒரு அமைச்சரவையை நியமித்தார்.

மேலும், ஜனாதிபதி மேக்ரான் அரசாங்கத்தின் அனைத்து உறுப்பினர்களையும் ஒன்றிணைத்து, ஜனவரி 3ஆம் திகதி நடைபெறும் மந்திரி சபைக்கு வருவார் என்று கூறப்படுகிறது.

# இஸ்மாயில் ஹனியேவை நாங்கள் தான் கொன்றோம்.. பகிரங்கமாக ஒப்புக் கொண்ட இஸ்ரேல் அமைச்சர்!

இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ், ஜூலை மாதம் ஈரானில் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியேவை இஸ்ரேல் கொன்றதை முதல் முறையாக பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்.

இது குறித்து பேசிய அவர், “இந்த நாட்களில், ஹவுதி பயங்கரவாத அமைப்பு இஸ்ரேல் மீது ஏவுகணைகளை வீசும்போது, எனது கருத்துகளின் தொடக்கத்தில் அவர்களுக்கு ஒரு தெளிவான செய்தியை தெரிவிக்க விரும்புகிறேன்: நாங்கள் ஹமாஸை தோற்கடித்து விட்டோம். ஹிஸ்புல்லாவை தோற்கடித்தோம், ஈரானின் பாதுகாப்பு அமைப்புகளை கண்மூடித்தனமாக அழித்துவிட்டோம். உற்பத்தி முறைகள், சிரியாவில் அசாத் ஆட்சியை வீழ்த்திவிட்டோம், தீமையின் அச்சுக்கு கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளோம். மேலும் கடுமையான தாக்குதலை எதிர்கொண்டு ஏமனில் உள்ள ஹவுதி பயங்கரவாத அமைப்பு, கடைசியாக நிற்கிறது” என்று காட்ஸ் கூறினார். இஸ்ரேல் “அவர்களின் மூலோபாய உட்கட்டமைப்பை சேதப்படுத்தும், நாங்கள் அவர்களின் தலைவர்களின் தலையை துண்டிப்போம் - நாங்கள் தெஹ்ரான், காசா மற்றும் லெபனானில் உள்ள ஹனியே, சின்வார் மற்றும் நசரெல்லாவுக்கு செய்தது போல் - நாங்கள் அதை ஹொடைடா மற்றும் சனாவிலும் செய்வோம்” என்று காட்ஸ் மேலும் தெரிவித்தார்.



## தேசத்தைக்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகள் எமக்கு நினைவூட்டும்.

உள்நாட்டில் உட்பட வெளிநாட்டில் சேவையாற்றுபவர்களையும், அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் உட்பட பண்டிகை காலத்தில் தமது அன்புக்குரியவர்களுடன் காலத்தை செலவிட முடியாத அனைவரையும் இந்த தருணத்தில் நன்றியுடன் நினைவுகூற வேண்டும்.

உலகம் முழுவதும் காணப்படும் யுத்த சூழல் காரணமாக சிறுவர்களும் மரணிக்கும் துர்பாக்கிய நிலைக்கு மத்தியில் நாம் நமது உள்ளங்களில் அமைதியை எதிர்பார்த்து காத்திருக்கின்றோம். குடும்பம், சமூகம் மற்றும் உலகம் என்ற அடிப்படையில் மன்னிப்பு வழங்குதல் மற்றும் ஐக்கியத்துடன் இருப்பதன் முக்கியத்துவத்தை நத்தார் பண்டிகை எமக்கு நினைவூட்டுகிறது.

அத்துடன் இந்த பண்டிகை காலத்தில் பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்கி மகிழ்ச்சியுடன் அதனை கொண்டாடுவதில் அவதானத்துடன் இருக்க வேண்டும். நமக்கு மாத்திரமன்றி ஏனையவர்களின் பாதுகாப்பையும் கருத்திற்கொண்டு சரியான தெரிவுகளை மேற்கொள்ளுங்கள்.

இந்த காலத்தில் பரஸ்பர உறவுகளை கட்டியெழுப்பவும், பொறுமையை வளர்த்துக்கொள்ளவும், ஐக்கியம் மற்றும் புரிந்துணர்வை ஏற்படுத்தவும் கடமைப் பட்டுள்ளோம். உங்கள் அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்! (ஐ-12)

## உணவகங்களில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணவுகள் பறிமுதல் செய்யப்பட்டன. 2 உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக் கப்படவுள்ளது. அதன் தொடர்ச்சியாக யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் இப்பரிசோதனை நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் அனுப்பி யுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ஐ)

## விசேட......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய பஸ் நிலையத்தில் இருந்து அட்டன், பதுளை, மட்டக்களப்பு வரையி லான நீண்ட தூர பயணங்களுக்கு சுமார் ஐம்பது மேலதிக பஸ்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவ ரத்து சபையின் பிரதி பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச மேலும் தெரிவித்தார். (ஐ-12)

## பெண்மீது......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை அவதானித்த அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களால் அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் நையப்புடைக்கப்பட்ட பின்னர், முச்சக்கர வண்டி ஒன்றின் மூலம் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பாதிக்கப்பட்ட பெண் ஒருவரும், அவரது கணவரும் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காகப் பொலீஸ் நிலையத்துக்கு வந்திருந்தனர். அங்கு வைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அந்தப் பெண்ணை விசாரித்தார்.

“தன்னிடம் கார் உள்ளதாகவும் நீங்கள் அழகாக உள்ளீர்கள் என்னுடன் பாலியல் இச்சைக்கு வருகிறாயா ?” என்று கேட்டு மதுபோதையில் கலகம் செய்ததாக அந்தப் அப்பெண் கூறினார்.

அந்த நேரத்தில் அங்கு நின்ற பெண்ணின் உறவினர் ஒருவர் தன்னிடம் சம்பவத்தின் காணொலியும் உள்ளதாக தெரிவித்தார்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விசாரணை செய்து கொண்டிருந்த போது, சந்தேக நபரான பொலிஸ் உத்தியோகத்தர் பெண்ணின் கணவன் மீது பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்குதல் நடாத்தியுள்ளார்.

அங்கிருந்த ஏனைய பொலீஸ் உத்தியோகத்தர்கள் தாக்குதல் நடத்திய பொலீஸ் உத்தியோகத்தரைத் தடுத்து நிறுத்தியதுடன், இரு தரப்பாரையும்

பொறுப்பதிகாரி அறைக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு, பாதிக்கப்பட்டவர்களை சமரசமாகப் போகுமாறு பொறுப்பதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் சமரசத்துக்கு உடன்படாமல், சம்பவம் குறித்து மனித உரிமைஆணைக்குழுவின்யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ/க்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

உடனடியாக்க் காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் பாதிக்கப்பட்டவர்களின் முறைபாடு குற்றவியல் சட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்எனவும், சம்பவம் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்எனவும் அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம், அடிப்படை உரிமை மீறல் முறைப்பாடொன்றை எழுத்துமூலம் சமர்ப்பிக்குமாறு பாதிக்கப்பட்டவர்களுக்கும் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

(ஐ - 09)

# வேட்புமனுக்களை பெறுவதற்கு அனுமதி வழங்கியுள்ள அரசாங்கம்




கொழும்பு, டிசெ 24

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான புதிய வேட்புமனுக்களை அழைப்பதற்கான புதிய வரைவுச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு புதிதாக வேட்புமனுக்களை கோருவதற்கு அமைச்சரவை எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் ருவன் செனரத் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபராலும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

இதன்படி, இந்த வரைவு மனு அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டவுடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க நேற்று அறிவித்துள்ளார்.

இதற்கமைய, தேவையான நடைமுறைகள் முடிந்தவுடன் தேர்தல் திகதி அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், 2025ஆம் ஆண்டு சிங்கள, தமிழ் புத்தாண்டுக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க அண்மையில் அறிவித்திருந்தார். (ஐ)

# இராஜதந்திரிகளுக்கு பயிற்சி அளிக்க ஐ.நா.வுடன் விசேட ஒப்பந்தம்



கொழும்பு, டிசெ 24

ஐக்கிய நாடுகளின் (ரூ) பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் இலங்கையின் இராஜதந்திரிகளுக்கு விசேட பயிற்சியளிக்கும் திட்டம் தொடர்பில், புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சுக்கு இடையில் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

இது 03 வருட காலத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் எனவும், கூட்டு வேலை கட்டமைப்பொன்று இதன்மூலம் வழங்கவுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கையொப்பமிட உத்தேசிக் கப்பட்டுள்ள வளங்களைப்பயன்படுத்துவதன் மூலம் பரஸ்பர நன்மைகள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், பயிற்சி மற்றும் கற்றல் ஆதரவு, இராஜதந்திரிகளுக்கு பயிற்சி, பேரிடர் ஆபத்து குறைப்பு மற்றும் நெருக்கடி மேலாண்மை மற்றும் புவி-தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு ஆகியவை ஐக்கிய நாடுகள் சபையிடம் இருந்து கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக நிலையான வளர்ச்சிக்கான 2030 நிகழ்ச்சி நிரலை செயல்படுத்துவது தொடர்பான செயற்திட்டங்கள் இதற்குள் அடங்குவதாக அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்த இருவர் கைது

கொழும்பு, டிசெ 24

வைத்திய பணிப்பாளரின் உரிய அனுமதி இன்றி வைத்தியசாலையில் அத்துமீறி உட்பிரவேசித்த இருவரை கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை வளாகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த வைத்தியசாலையில் இருவர் அனுமதி இன்றி உட்பிரவேசித்ததாக அங்கு பாதுகாப்பு பணிக்கு பொறுப்பான அதிகாரியினால் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் திங்கட்கிழமை மாலை முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டிற்கமைய, இருவரையும் கைது செய்த கல்முனை தலைமையக பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், கைதானவர்கள் கல்முனை மாநகரில் உள்ள பிரபல ஆடையகம் ஒன்றின் பணியாளர்கள் என்பதுடன் வைத்தியசாலை பணிப்பாளரின் முன் அனுமதி இன்றி சுத்தியலுடன் வைத்தியசாலைக்குள் பிரவேசித்து வைத்தியசாலையில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடி முரண்பாடான கருத்துக்களை வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் தெரிவித்துள்ளதாக விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

எனினும், கைதானவர்கள் வழமை போன்று தாங்கள் புதிய ஆண்டிற்கான நாட்காட்டி அரச தனியார் திணைக்களங்களுக்கு கொழுவி அடிப்பதற்கு சென்றதாகவும் அதன் போது இவ்வாறான நிலைமை ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் அவ்வைத்தியசாலை பணிப்பாளர், வைத்தியர் குணசிங்கம் சுகுணன் உள்ளக விசாரணை ஒன்றினை மேற்கொண்டுள்ளதுடன் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திகவின் வழிகாட்டலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் மேலதிக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ)







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.12.2024 இல் வெளியிடப்பெற்றது.